ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2021.11.25 |

**நாணயக்கொள்கை மீளாய்வு : இல. 08 - 2021 நவெம்பர்**

# இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுகின்றது

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது 2021 நவெம்பர் 24ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பவற்றினை முறையே 5.00 சதவீதம் மற்றும் 6.00 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. பேரண்டப் பொருளாதார நிலைமைகளையும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பக்கங்களில் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளையும் கவனமாக பரிசீலனையிற் கொண்டதன் பின்னர் சபையானது இத்தீர்மானத்தை மேற்கொண்டிருந்தது. அண்மைய பணவீக்க அதிகரிப்பானது வழங்கல் இடையூறுகள் அத்துடன் உலகளவில் பண்ட விலைகளின் திடீர் அதிகரிப்பு என்பவற்றின் முக்கிய காரணமாகவே தூண்டப்பட்டிருந்ததென நாணயச்சபையானது அவதானத்தில் கொண்டிருந்ததுடன் முன்னோக்கிய காலப்பகுதியில் பொருளாதாரம் அதனது சாத்தியப்பாட்டினை அடைந்துகொள்வதற்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை பொருத்தமான வழிமுறைகளுடன் நடுத்தரகாலத்தில் இலக்கிடப்பட்ட மட்டங்களில் பணவீக்கத்தினைப் பேணுவதற்கான அதன் கடப்பாட்டினை மீளவும் வலியுறுத்தியிருந்தது.

## இலங்கைப் பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைகின்றது

இலங்கைப் பொருளாதாரமானது இறை மற்றும் நாணயக்கொள்கை சார்ந்த தூண்டுதல்களினால் ஆதரவளிக்கப்பட்டு 2021இன் முதலரைப் பகுதியில் உறுதியானதொரு மீட்சியினை எடுத்துக்காட்டியிருந்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மீள் தோற்றம் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகள் மீதான அதனது இடையூறுகள் 2021இன் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் தற்போதைய மீட்சியினை ஓரளவிற்கு பாதிப்படையச்செய்துள்ளதாக தென்படுகின்றது. இருப்பினும், கிடைக்கக்கூடியதாயுள்ள உயர்ந்தளவிலான அதிர்வெண் குறிகாட்டிகள் பொருளாதார நடவடிக்கைகள் விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்புவதனை எடுத்துக்காட்டுகின்றன. 2021 ஒத்தோபரில் கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய முடக்க வழிமுறைகளின் நீக்கம் மற்றும் நாடளாவிய ரீதியிலான கொவிட்-19 தடுப்பூசியேற்றும் செயற்றிட்டத்தின் வெற்றிகரமான முன்னெடுப்பு என்பன எதிர்வரும் காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளுக்குத் துணையளிக்கக்கூடும். உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 2021இல் ஏறத்தாழ 5 சதவீதமாக எறிவுசெய்யப்பட்டுள்ள அதேவேளை உலகளாவிய மற்றும் நாடளாவிய ரீதியில் கொவிட்-19 தொற்றிற்குள்ளாகும் எண்ணிக்கையில் நிலவுகின்ற அதிகரிப்பானது இவ்வெதிர்பார்க்கையின் மீது ஓரளவு தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும்.

**வெளிநாட்டுத் துறையானது உறுதிமிக்க சவால்களுக்கு எதிராக தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டுள்ளது**

வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் வலுவாகக் காணப்பட்டு, தொடர்ச்சியாக நான்காவது தடவையாக 2021 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 1 பில்லியனைப் காட்டிலும் அதிகளவில் பதிவுசெய்திருந்தன. வணிகப்பொருள் ஏற்றுமதிகள் 2021 ஒத்தோபரில் முன்னைய மாதங்களில் கண்டிறாத உயர்ந்தளவினைப் பதிவுசெய்துள்ளதாகப் பூர்வாங்க தரவுகள் காண்பிக்கின்றன. இறக்குமதிகள் மீதான செலவினமும் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியினைக் காட்டிலும் 2021 செத்தெம்பர் இறுதியில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையினை விரிவடையச்செய்திருந்தது. சுற்றுலாத்துறையானது கட்டுப்பாடுகளின் தளர்த்தல்களுடன் உறுதியான மீளெழுச்சிச் சமிக்ஞைகளைக் காண்பித்துள்ளது. அண்மைய மாதங்களில் தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்பிலான மெதுவடைந்த உட்பாய்ச்சல்களுக்கு மத்தியிலும், தொழிலாளர் புலம்பெயர்வில் தொடர்ச்சியான அதிகரிப்பு மற்றும் முறையான வழிகளினூடாக பணவனுப்பல் பாய்ச்சல்களை வசதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் என்பவற்றின் காரணமாக எதிர்வரும் காலப்பகுதியில் மீளெழுச்சியொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் தேய்வு 2021இன் இதுவரையான காலப்பகுதியில் 7.2 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. நாணயமாற்று வீதமானது கடந்த மூன்று மாதங்களில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக ரூ.200-203 மட்டங்களில் உறுதியாக காணப்பட்டுள்ளது. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021 ஒத்தோபர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 2.3 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தன. எனினும், இது சீன மக்கள் வங்கியுடனான யுவான் 10 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியனுக்குச் சமமான) கொண்ட இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கவில்லை. மேலும், புதிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் அதேபோன்று நிதியியல் துறை உள்ளடங்கலாக தனியார் துறைக்கான எதிர்பார்க்கப்பட்ட உட்பாய்ச்சல்களை ஈர்ப்பதற்கு அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் முன்னெடுக்கப்பட்ட வழிமுறைகள் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதன் மூலம் எதிர்வரும் காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறையினை வலுப்படுத்தும். குறிப்பாக, ஏற்றுமதி வருவாய்களில் அதிகளவானதொரு மாற்றுதல்கள் அவதானிக்கப்பட்டிருந்த அதேவேளை அரசாங்கம் மற்றும் மத்திய வங்கிகளின் வெளிநாட்டு தரப்பினர்களுடனான கலந்துரையாடல்கள் இடம்பெற்றவருகின்றதுடன் இது *ஆறு மாதகால வழிகாட்டலில்* எதிர்பார்க்கப்பட்ட பாதையுடன் பரந்தளவில் இசைந்து செல்கின்றது.

**இறுக்கமான நாணய நிலைமைகளின் கடந்துசெல்வதனைப் பிரதிபலித்திருந்தது சந்தை வட்டி வீதங்கள் அதிகரித்திருந்தன**

இறுக்கமான நாணய மற்றும் திரவத்தன்மை நிலைமைகளைப் பதிலிறுத்தி பெரும்பாலான சந்தைக் கடன் வழங்கல் வீதங்கள் மேல்நோக்கிச் சீராக்கப்பட்டிருந்தன. குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்த அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் முதலாந்தர ஏலங்களில் மேம்பட்ட கோரிக்கைகளுடன் நிலைப்படுத்தப்பட்டிருந்ததுடன் இது மேம்பட்ட சந்தை மனோபாவங்களைப் பிரதிபலித்திருந்தது. அதேவேளை, தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளினால் துணையளிக்கப்பட்டு குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்திருந்த தனியார் துறைக்கான கொடுகடனானது 2021 செத்தெம்பரில் ஓரளவு மெதுவடைந்திருந்தது. இருப்பினும், 2021 செத்தெம்பர் இறுதியில் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான தரவுகள் பொருளாதாரத்தின் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளுக்கு

வழங்கப்பட்ட கொடுகடன்கள் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டுள்ளதனைக் குறித்துக்காட்டியிருந்ததுடன் அதனூடாக முன்னோக்கிச் செல்லும் பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஆதரவளித்திருந்தது. அதேவேளை, வங்கித்தொழில் முறைமையிடமிருந்து அரசதுறை பெற்றுக்கொண்ட குறிப்பாக அரசிற்கான தேறிய கொடுகடனானது தொடர்ந்தும் விரிவடைந்திருந்தது. ஒட்டுமொத்தமாக, தனியார் துறைக்கான கொடுகடனின் மிதமாக்கல் மற்றும் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் வீழ்ச்சி என்பவற்றுடன் இணைந்த வகையில் விரிந்த பணத்தின் ($M_{2b}$) வளர்ச்சியானது 2021 செத்தெம்பரில் மெதுவடைந்திருந்தது.

**பணவீக்கமானது நிரம்பல் பக்க சமமின்மைகள் மற்றும் பன்னாட்டு ரீதியிலான பண்ட விலைகளில் அதிகரிப்பு என்பவற்றின் முக்கிய காரணங்களால் அண்மையில் அதிகரித்திருந்தது**

கூட்டுக்கேள்வி நிலைமைகளின் படிப்படியான உறுதித்தன்மையுடன் கூடிய நிரம்பல் பக்க இடையூறுகள், உள்நாட்டு விலைக் கட்டுப்பாடுகளின் நீக்கம் மற்றும் அதிகரித்துச் செல்லும் உலகளாவிய வலு மற்றும் பண்ட விலைகளைப் பிரதிபலித்து பல்வேறு நிருவாக ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கான மேல்நோக்கிய சீராக்கங்கள் என்பன அண்மையில் இலக்கிடப்பட்ட மட்டங்களுக்கு மேலாக பணவீக்கத்தினை உந்தச்செய்துள்ளன. முதன்மைப் பணவீக்கத்தின் மீது மேலுமொரு உயர்வடைதலானது உடனடி எதிர்காலத்தில் சாத்தியமானதொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் அத்தகைய அசைவுகள் தற்காலிகமானதாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கியினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நாணயக்கொள்கை வழிமுறைகள் மிதமிஞ்சிய கேள்வி அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகளின் கட்டியெழுப்பலைத் தடுப்பதற்கும் துணைபுரியும்.

**கொள்கை வட்டி வீதங்கள் அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணப்படுகின்றன**

மேலே எடுத்துக்காட்டப்பட்டவாறு தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, கொள்கை வட்டி வீதங்களின் தற்போதைய மட்டம் பொருத்தமானதென நாணயச்சபை கருதியுள்ளது. எவ்வாறிருப்பினும், வெளிநாட்டுத் துறையில் உறுதிப்பாட்டினை உறுதிசெய்தல், பணவீக்கத்தினை விரும்பப்பட்ட வீச்சில் பேணுதல் மற்றும் உறுதியான பொருளாதார மீட்சிக்கு ஆதரவளித்தல் என்பவற்றின் நோக்குடன் மத்திய வங்கி விழிப்பாக இருக்குமென்பதுடன் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் சந்தை அபிவிருத்திகளை தொடர்ந்தும் கண்காணித்து அவசியமானவாறும் அவசியப்படுகின்ற போதும் பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்ளும்.

**நாணயக்கொள்கை தீர்மானம்: கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு விகிதம் மாற்றமடையவில்லை**

| | |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 5.00% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 6.00% |
| வங்கி வீதம் | 9.00% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 4.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடொன்று இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் 2021 நவெம்பர் 25 அன்று மு.ப. 11.00 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யுடிப் (YouTube) என்பவற்றின் வாயிலாக நேரலையாக இடம்பெறும்.

2022ஆம் ஆண்டிற்கான நாணயக்கொள்கை மீதான முதலாவது கிரமமான அறிக்கை வெளியிடும் திகதி காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

## இணைப்பு I

### அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | மாச் 21 | ஏப் 21 | மே 21 | யூன் 21 | யூலை 21 | ஓகத் 21 | செத் 21 | ஒத் 21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 4.1 | 3.9 | 4.5 | 5.2 | 5.7 | 6.0 | 5.7 | 7.6 |
| | தேநுவிசு(2013=100) | 5.1 | 5.5 | 6.1 | 6.1 | 6.8 | 6.7 | 6.2 | 8.3 |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 3.1 | 3.0 | 3.2 | 3.2 | 3.7 | 4.1 | 5.0 | 6.3 |
| | தேநுவிசு(2013=100) | 4.3 | 4.1 | 4.2 | 4.1 | 4.4 | 4.7 | 4.8 | 7.2 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### அட்டவணை 02: நாணயத்துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சன 21 | பெப் 21 | மாச் 21 | ஏப் 21 | மே 21 | யூன் 21 | யூலை 21 | ஓகத் 21 | செத் 21 |
| ஒதுக்குப் பணம் | 976 | 978 | 1,029 | 1,031 | 1,036 | 1,065 | 1,064 | 1,089 | 1,296 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 9,533 | 9,651 | 9,839 | 9,947 | 10,033 | 10,165 | 10,304 | 10,514 | 10,488 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (321) | (386) | (430) | (431) | (429) | (481) | (699) | (701) | (722) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 9,854 | 10,037 | 10,269 | 10,378 | 10,462 | 10,646 | 11,003 | 11,215 | 11,210 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 4,758 | 4,793 | 5,005 | 4,965 | 5,024 | 5,195 | 5,513 | 5,682 | 5,792 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 1,058 | 1,080 | 1,098 | 1,093 | 1,113 | 1,132 | 1,141 | 1,137 | 1,123 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 6,197 | 6,276 | 6,388 | 6,446 | 6,501 | 6,585 | 6,661 | 6,796 | 6,825 |
| விரிந்த பணம் ($M_4$) | 11,643 | 11,790 | 12,010 | 12,154 | 12,265 | 12,402 | 12,563 | 12,790 | 12,742 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | மே 21 முடிவில் | யூன் 21 முடிவில் | யூலை 21 முடிவில் | ஓகத் 21 முடிவில் | செத் 21 முடிவில் | ஒத் 21 முடிவில் | 2021 நவெ 24இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 4.50 | 4.50 | 4.50 | 5.00 | 5.00 | 5.00 | 5.00 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 5.50 | 5.50 | 5.50 | 6.00 | 6.00 | 6.00 | 6.00 |
| **சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம்** | 4.66 | 4.93 | 5.10 | 5.79 | 5.94 | 5.93 | 5.92 |
| **திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 5.13 | 5.18 | 5.22 | 5.87 | 6.70 | 8.43 | 7.53 |
| 182-நாள் | 5.14 | 5.19 | 5.23 | 5.90 | 6.99 | 8.16 | 8.02 |
| 364-நாள் | 5.18 | 5.23 | 5.25 | 5.93 | 7.01 | 8.18 | 8.16 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 5.65 | 5.51 | 5.76 | 6.01 | 6.42 | 7.82 | 8.03 (அ) |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 9.64 | 9.50 | 9.45 | 9.38 | 9.37 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 7.74 | 7.47 | 8.09 | 8.04 | 8.14 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 4.97 | 4.87 | 4.77 | 4.75 | 4.75 | 4.79 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 5.94 | 5.82 | 5.67 | 5.62 | 5.64 | 5.70 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 4.77 | 4.98 | 4.99 | 5.19 | 5.53 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 4.90 | 5.10 | 5.15 | 5.35 | 5.69 | - | - |

(அ) 2021 நவெம்பர் 19 அன்று முடிவடைகின்ற வாரத்திற்கானது

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*